

**‘ஜெயித்து வாழ்ந்திட’ வாலிபர் செய்திகள்!**

**“வாலவயதின் குமாரர் பலவான் கையிலுள்ள அம்புகளுக்கு ஒப்பாயிருக்கிறார்கள்”**
**(சங்கீதம். 127:6)**

**(சிருஷ்டிகரிடம் சரணடைந்து வாழ்ந்திட அழைக்கும் செய்திகள்)**

| 02.10.2020 | வாழ்வின் கரை சேர்க்கும் விசுவாசத்தின் ‘ஆத்தும நங்கூரம்’ |
| --- | --- |

சில ஆண்டுகளுக்கு முன்னர் நான் ஒரு மரண வீட்டிற்குச் சென்றிருந்தேன். புருஷனை இழந்த இளம் கிறிஸ்தவ மனைவி ஆண்டவரைத் திட்டிக்கொண்டே அழுவதைக் கண்டேன். அந்த சகோதரியின் கணவனின் சடலத்தை அடக்கம் செய்வதற்காகத் தொலைவிலுள்ள கல்லறைத் தோட்டத்திற்கு ஒரு லாரி மூலமாக நாங்கள் எடுத்துக் சென்று கொண்டிருந்தபோது, அந்த சகோதரியும் எங்களுடன் வந்தார்கள். வீட்டிலிருந்து கல்லறைத் தோட்டம் வரை அவர்கள் ஆண்டவரைப் பார்த்து “என்னைப் பார்! என் சின்னஞ்சிறு குழந்தைகளைப் பார்! நாங்கள் எங்கே போவோம்? நாங்கள் உனக்கு என்னென்ன ஊழிய காரியங்களையெல்லாம் செய்தோமே உனக்கு இரக்கமில்லையா, நன்றியில்லையா, கண்களில்லையா?” என்று வசைமாரி பொழிந்துகொண்டே வந்தார்கள். எவ்வளவோ தடுத்துக் கூறினும் அவர்கள் கேட்காமல் தங்கள் பல்லவியைப் பாடிக்கொண்டுதான் வந்தார்கள். அப்படி ஜீவனுள்ள ஆண்டவரை மக்கள் மத்தியில் வைத்து தூஷிக்கச் சொல்லி அவர்களைத் தூண்டிவிட்டவன் பிசாசு! என்பதை நாம் மனதில் வைத்துக் கொள்ளல் வேண்டும். அன்று *யோபு* பக்தனின் மனைவியின் உள்ளத்திலிருந்து தேவனைத் தூஷிக்க ஏவிவிட்ட (யோபு.2:9) அதே தீயோன்தான் இந்த இளம் கைம்பெண்ணையும் உசுப்பிவிட்டிருந்தான். **மாந்தர்கள் ஆண்டவரைத் தூஷிக்க வேண்டுமென்பது பிசாசின் ஒரு அலாதி ஆவல்.**

கிறிஸ்தவ பயணத்தில் பயணிக்கும் யாவரும் விழித்துக்கொள்ளக்கடவோம்! ஆழ்கடல் பயணத்தில், கரை சேர வேண்டிய நேரம் வந்துவிட்டது! ஆனால், அந்த கப்பலில், பயணத்தை உறுதிப்படுத்தும் ‘நங்கூரம்’ இல்லை! அந்நிலையில், அந்த கப்பல் அலசடிப்பட்டு, சேர வேண்டிய கரையைவிட்டு, 100மைல் தாண்டி சென்று விட்டது! இவ்வாறு ஆத்துமாவின் ‘விசுவாச நங்கூரம்’ இல்லாமல் செல்லும் வாழ்க்கை பயணம், நிச்சயம் நிம்மதியிழந்து அல்லலுற்று வீழும்! இன்றே நமது ஆத்தும நங்கூரமாய் இயேசுவை முழு விசுவாசத்துடன் அண்டி வாழ்வோமாக! (எபி.6:19). அவர் மாத்திரமே நம்மை ‘முற்றும் முடிய’ காத்து இரட்சிக்க வல்லவர்!

**- வாலிபம் இயேசுவுக்கே**